# கொள்கை மறவர் இனமானப் பேராசிரியர்!



பவள விழா காணும் நமது பேரியக்கத்தின் மூத்த முன்னோடி இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்த நாளில் அவரைப் போற்றி வணங்குவோம்.

அவரது வழியொற்றி கழகத்தின் மேன்மைக்காக உறுதியுடனும், மாறாப் பற்றுடனும் கழகத் தொண்டாற்றவும், சமூகச் சீர்திருத்தப் பணிகளுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ள கழகத்தவர் அனைவரும் சூளுரைப்போம்.

கழகக் கொள்கைகளைக் காக்க, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு கழகத்தின் வளர்ச்சிக்கு நம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள உறுதியேற்கும் நன்னாள் இப்பொன்னாள்.

இனமானப் பேராசிரியர் அவர்கள் வயது மூப்பின் காரணமாக கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது அபூர்வமாகி விட்ட பொழுது, அவர் அண்ணா அறிவாலயத்தில் கடைசியாக கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழாதான். அவரது உடல் உபாதைகளையும் மீறி கலைஞர் சிலை திறக்கப்பட்ட பொழுது யாருடைய உதவியுமின்றி தானே எழுந்து நின்று தன் வாழ்நாள் நண்பருக்கு, தான் தலைவராக ஏற்றுக் கொண்ட கொள்கை மறவர்க்கு வீரவணக்கம் செலுத்திய காட்சி, கண்களை குளமாக்கியது. அத்தகைய பாச உணர்வும், கொள்கை பிணைப்பும் அவ்விருவரிடையே நிலவியது.

முத்தமிழறிஞர் கலைஞர் மீது இனமானப் பேராசிரியரும், இவர் மீது அவரும் கொண்டிருந்த அன்பிற்கும், உறவுக்கும், இணையானது கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இனமானப் பேராசிரியர் அவர்கள் மீது கொண்டிருக்கும் பற்றும், பரிவும், பாசமும், நேசமும்.

இனமானப் பேராசிரியர் அவர்கள் நலிவுற்று பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வது குறைந்த பின்னர், தலைவர் தளபதி அவர்கள் கணக்கிடலங்கா முறை இனமானப் பேராசிரியர் இல்லத்திற்கு கழக முன்னோடிகள் படை சூழ வந்திருந்து அவரது உடல் நிலையைப் பற்றி அவரது குடும்பத்தாரிடமும் பேராசிரியரிடமும் பாசத்துடன் கேட்டறிந்து செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார். அவ்வருகைகளின் பொழுது இனமானப் பேராசிரியரும் தளபதியை கண்டவுடன் முகமலர்ச்சியடைந்து புன்னகைப்பார். தலைவர் தளபதி அவர்களின் பேராசிரியரின் கைகளைப் வாஞ்சையுடன் பற்றிக் கொண்டு ‘அறிவாலயம் போக லாமா?’ என்று அன்புடன் வினவுவார், பேராசிரியரும் பதிலுக்கு புன்னகைப்பார்.

தலைவர் தளபதியார் தனது தந்தைக்கு நிகராக பேராசிரியர் அவர்கள் மீதும் அன்பை பொழிந்தார். இனமானப் பேராசிரியரை இயற்கை தன்னோடு அழைத்துக் கொண்ட பொழுது, தலைவர் தளபதி அவர்கள் கலங்கி, கதறி கண்ணீர் விட்ட பொழுது அதனைக் கண்டு கலங்காதவர்களே கிடையாது. அவரது “சங்கப் பலகை சாய்ந்ததே” என்ற இரங்கற்பா மனதை உருக்குவதாக அமைந்தது. இது யாவும் பேரறிஞர் அண்ணா அவர்கள், கழகத்தவரிடம் கட்டமைத்த குடும்ப பாச உறவுக்கு சாட்சியாக அமைந்தது.

இனமானப் பேராசிரியர் அவர்கள் மீது கழகத் தலைவர் கொண்டிருந்த மதிப்பும், பாசமும் இக்குடும்ப பாச உறவுக்கு ஓர் சிறந்த உதாரணம்.

தலைவர் தளபதி அவர்கள் 2021 ஆம் ஆண்டில் திராவிட மாடல் அரசிற்கு தலைமை ஏற்றதற்கு பின்னர் இனமானப் பேராசிரியருக்கு இரண்டு அரசு வளாகங்களில் சிலை அமைத்தார், குறிப்பாக அவர் அமைச்சராக தொண்டாற்றிய கல்வித்துறை வளாகத்திற்கு அவரது பெயரை சூட்டியது மட்டுமல்லாமல் அங்கு ஓர் ஆளுயர வெண்கலச் சிலையை நிறுவியுள்ளார், அதைப்போல நிதியமைச்சராக தொண்டாற்றிய நிதியமைச்சக அலுவலகத்திலும் அவரது சிலையை நிறுவியுள்ளார், மேலும் பள்ளிக் கல்வித்துறையில் ரூபாய் 7500 கோடியில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மறுசீரமைப்பு திட்டத்தை அறிவித்து, பேராசிரியரின் புகழுக்கு மென்மேலும் பெருமை சேர்த்துள்ளார்.

தந்தையை மிஞ்சிய தனயனாக கழகத்தின் இளந்தலைவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எப்பொழுதெல்லாம் தனது உயர்வின் பொழுதோ அல்லது பிறந்தநாளன்றோ, முத்தமிழறிஞர் கலைஞர் தாத்தாவின் நினைவிடத்தில் மரியாதை செலுத்துதற்கு நிகராக பேராசிரியர் இல்லத்திற்கு வருகை புரிந்து அவரை நினைவு கூர்ந்து, புகழஞ்சலி செலுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரை தலைவராக ஏற்றுக் கொண்டு தடம் மாறாமல், கலைஞருக்கு உற்ற இணையாக செயல்பட்டு கழகத்தை காத்து நின்றவர் இனமானப் பேராசிரியர், கலைஞருடைய தலைமைக்கும், கழகத்திற்கும் சோதனைகள் பல வந்த பொழுதும், கண்ணை இமை காப்பது போல் கலைஞரையும், கழகத்தையும் தன் எஃகு போன்ற உள்ள உறுதியுடன், கொள்கை வீரராக இனமானப் பேராசிரியர் பாதுகாத்தார்.

தமிழ்ச்சமூகம் உய்வுபெற தன் வாழ்நாளெல்லாம் பேராசிரியர் ஆற்றிய அறிவார்ந்த பணிகள் காலத்தால் அழியாத பெரும் பணியாகும்.

பேரறிஞர் அண்ணா நம்மை விட்டு பிரிந்த பிறகு கழகத் தலைவராக கலைஞரை ஏற்றுக் கொண்டு அவருடன் இணைந்து தன் வாழ்நாளின் இறுதி வரையில் இயக்கத் தொண்டாற்றினார்.

1980 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஈரோடு மாவட்ட மாநாட்டில் இனமானப் பேராசிரியர் ஆற்றிய உரையில் கலைஞரின் பன்முக ஆற்றலைப் பற்றியும் அவரின் இன்றியமையாத் தலைமையை பற்றியும் பின் வருமாறு கூறு கிறார்;

**“பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எழுத்துக்குப் பின்னர், ஒருவரின் எழுத்து நிலைத்த எழுத்தாக, இந்த நாட்டு மக்களிடத்தில் நின்ற எழுத்தாகியது ஒன்று உண்டென்றால், தமிழ்நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கிற ஆற்றலுள்ள எழுத்து உண்டென்றால், அது கலைஞர் அவர்களுடைய எழுத்தாகத்தான் இருக்கிறது.**

**இப்படிப்பட்ட எழுத்து ஆற்றல் மிக்கவர், சொல்லாற்றல் மிக்கவர், சிந்தனையாளர், முற்போக்கு கருத்துகளுக்குத் துணை நிற்பவர், நாட்டுக்காக, மக்களுக்காக அல்லும் பகலும் பாடுபடுபவர் - இந்த நாட்டிலே மற்றொருவர் இல்லை “ என்று கலைஞரைப் பற்றி புகழ்ந்துரைத்துள்ளார்.**

**இன உணர்வு, மொழியுணர்வு, அழுத்தமான கொள்கை உணர்வு, இவையனைத்தையும் நெஞ்சில் பதித்து அவற்றைப் பரப்பிட உறுதி பூண்டு, அந்த உறுதி எந்த நிலையிலும் ஓர் ஊசி முனையளவும் குறையாமல் தனது பொது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு தொண்டாற்றுபவர்” என்று இனமானப் பேராசிரியர் அவர்களைப் பற்றி கலைஞர் புகழ்ந்துரைத்துள்ளார்.**

நூற்றாண்டை கடந்த திராவிட இயக்கத்தில், தமது தந்தையார் திரு.கல்யாணசுந்தரனார் ஊட்டிய சுயமரியாதை உணர்வின் காரணமாக திராவிட இயக்கத்தின் உயர்வுக்காகவும், அதன் கொள்கைகளை மக்களிடம் பரப்பும் உன்னதப் பணியை பல சிரமங்களிடையே பேராசிரியர் அவர்கள் மேற்கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற 1940-1944 களிலேயே தனது ஆற்றல் மிக்க நாவன்மையால் பல்வேறு இயக்க மேடைகளில் கருத்து மழை பொழிந்தார்.

1944 ல், திராவிடர் மாணவர் மாநாடு குடந்தையில் நடைபெற்ற பொழுது அம்மேடையில் பல்கலைக்கழக மாணவராக அவர் ஆற்றிய கருத்தாழமிக்க உரையை கேட்ட பல தலைவர்கள் குறிப்பாக அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி, நமது இயக்கத்தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றோரின் பாராட்டைப் பெற்றது மட்டுமல்லாமல், லட்சியப் படை வரிசைக்கு ஓர் லட்சியவாதியாக தலைவர்களின் கவனத்தை ஈர்த்தார். அக்காலகட்டத்தில் தொடங்கிய அவரது கழக இலட்சியப் பயணம் அவரது இறுதி மூச்சு வரையில் இடைநில்லாமல் தொடர்ந்து தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் கொள்கை முழக்கம் ஓங்கி ஒலித்தது.

1953 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகமாய் நாம் தொண்டாற்றிய பொழுது தென்னார்க்காடு மாவட்ட திமுக சமூக சீர்திருத்த மாநாட்டில் பேராசிரியர் அவர்கள் தமது தலைமையுரையில் பின் வருமாறு பேசுகிறார்;

**“நீதிக்கட்சியும், சுயமரியாதை இயக்கமும் மலர்ந்த நாட்களில், நாம் “மிகச் சிலர்”! இடைக்காலத்தில் நாம் “சிலர்”! இன்று நாம் “பலர்”: மிகப் பலரின் ஆதரவும் அன்பும் பெற்றவர்களாக உள்ளவர்கள்! விரைவில் நாம் “மிகப் பலராவோம்”! பெருமான்மையினராகி நாட்டு மக்கள் எல்லோரும் நாமாவோம்! எல்லோரும் “திராவிடர்” ஆவர்! தமிழ் நாடாம் நம்நாடு நமதாட்சியிலே வாழ்வு பெறும்! இதில் “ஐயமில்லை”, உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரிகிறது நமது வளர்ச்சி! அச்சமில்லை நமது கொள்கையிலே உள்ள பற்றும் ஆர்வமும் வளர்ந்தப்படி இருப்பதால்! “வெற்றி உறுதி”, முயற்சித்தால் முடியாத தொன்றில்லை என்பதை நமது தோழர்கள் உணர்ந்துள்ளதால்!**

**செயலற்ற, சிந்தனையற்றுத் தாழ்வுற்ற தமிழர்களைத் தட்டியெழுப்பித் தன்னுணர்வு கொள்ளச் செய்யவே திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது. சமூகச் சீர்திருத்தப் பணியே நமது மூச்சாகவும் பேச்சாகவும் இருந்து வருகின்றன. சமூக சீர்திருத்தத்தை, நமது இயக்கத்திற்கு “உயிர்” என்றால், அரசியல் “உடல்” எனலாம். உயிரும் உடலும் இணைந்துள்ளதே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்த மாபெரும் இயக்கம் - என்று பேராசிரியர் அவர்கள் முழங்கியுள்ளார்.**

தி.மு.க. மக்கள் சக்தியாக இயல்பாகவே இடம் பெற்று தொடர்ந்து விழுதுவிட்டு வளர்ந்து வருகின்ற ஓர் ஆலமரம் போன்ற கட்சி. அண்ணாவின் மறைவிற்கு பிறகு கலைஞர் தி.மு.க.வின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதை பற்றி இனமானப் பேராசிரியர் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறார்.

“கலைஞர் அவர்கள் ஜனநாயக முறையில் சந்திக்க வேண்டியவைகளைச் சந்திக்க வேண்டிய கட்டத்தில் சந்திப்பார். கலைஞர் அவர்களே செப்பியதுதான் பின் வருவது;

**“என்னுடைய கையில் இருப்பது அண்ணா அவர்கள் தந்த திருவிளக்கு, காற்று அடிக்கிற நேரத்தில் அந்த விளக்கை வைத்துக் கொண்டிருப்பவன் அதைத் தூக்கிக்கொண்டு அலையமாட்டான்; அதை பாதுகாத்துதான் வைத்திருப்பான், ஒளி அணைந்து விடக் கூடாது என்பதற்காக” அதற்கேற்ப தமிழ் ஒளியைக் காப்பாற்ற, தமிழ் இன உரிமையைக் காப்பாற்ற, அண்ணா அவர்கள் ஏற்றி வைத்த ஒளி தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டும். “**

எந்த அளவுக்குப் பக்குவமாக, அடக்கமாகக் கடமையை ஆற்றவேண்டுமோ அந்த அளவுக்கு கடமையை ஆற்றுவதற்கான தகுதி படைத்தவராகத்தான் கலைஞர் இருக்கிறார் என்று பேராசிரியர் கலைஞரின் தலைமையை பற்றி பூரிப்புடன் விளக்குகிறார்.

அந்த விளக்கை முத்தமிழறிஞர் கலைஞரிடமிருந்து தலைவர் தளபதி அவர்களின் கரங்களில் பத்திரமாக ஒப்படைக்க காரணமானவர் இனமானப் பேராசிரியர் அவர்கள்.

அவ்விளக்கு கழகம் நூற்றாண்டு காணும் பொழுது நமது இளந்தலைவர் உதயநிதியின் கரங்களில் பத்திரமாக ஒப்படைக்கப்படும் என்ற நம்பிக்கை கழகத்தவர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிறது.

1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் எட்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது, அம்மாநாட்டில் இனமானப் பேராசிரியர் அவர்கள் இளைஞர் களுக்கு ஓர் வேண்டுகோளை விடுக்கிறார்;

**“இளைஞர்களே! எழு ஞாயிறுகளே! ஈட்டி முனைகளே! தமிழகத்தின் வருங்காலச் சிற்பிகளே! உங்கள் உள்ளத்தில் ஓர் உறுதியை மேற்கொள்ளுங்கள், ஒரு கட்சிக்காக மட்டும் நாம் பாடுபடவில்லை. தமிழ் இனத்திற்காக பாடுபடுகிறோம். தமிழ் மொழியை, தமிழ் இனத்தை, தமிழ்நாட்டை வளம்பெறச் செய்து காப்பதற்காக நம்மை நாம் வளர்த்துக் கொள்கிறோம்; நம் குடும்பத்தை வாழ வைப்பதற்கு மட்டுமல்ல. தமிழைக் காப்பதற்கு, ஆதிக்க இந்தியால் தமிழுக்கு வரும் கேட்டைத் தடுத்து நிறுத்த, பிறமொழி ஆதிக்கத்தால் மோகத்தால் தமிழுக்கு ஏற்படும் இழிவைத் துடைக்க, நான் என்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறேன் என்று இளைஞர்களே நீங்களே உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.**

**நமது திராவிட இயக்கம் தமிழனுடைய உரிமையை ஒடுக்கும் கூட்டத்தினுடைய ஆதிக்கத்தை ஒழிக்காமல் ஓயாது. தமிழனை நான்காம் தரச் சாதியாக இழிவுப்படுத்தும் அந்தக் கொள்கையை, தமிழ் மொழியைத் தாழ்வுபடுத்துகிற வடமொழியின் ஆதிக்கத்தை ஆயிரம் அடி ஆழத்தில் புதைத்தால் தவிர நமது இயக்கம் ஓயாது. தனிமனிதர்களான நாங்கள் நிலையானவர்களல்லர் ஒரு நாள் முடிவு உண்டு, ஆனால் இயக்கத்தின் பயணம் முடிவில்லாமல், பொலிவுடனும், ஏற்றத்துடனும் தொடர அடுத்தடுத்த வரவிருக்கும் தலைமுறைகளுக்கு வழி காட்டக் கூடியதாக இளைஞர் பட்டாளம் வளர்ந்தாக வேண்டும், இளைஞர் அணித் தம்பிமார்கள், மாணவர் அணித் தோழர்கள், வாலிபத் தோழர்கள் உங்களுடைய அரிய பணியால் வருங்காலத் தமிழகம் ஒளிபெற்றாக வேண்டும், வருக்காலத் தமிழகத்தை வாழ வைப்பதற்கு இளந்தோழர்கள் உறுதியேற்க வேண்டும்” என்று தனது விழைவை தெரிவித்துள்ளார் இனமானப் பேராசிரியர் அவர்கள்.**


**சி. சேரன்**
தலைமைச் செயற்குழு உறுப்பினர்,
செயலர் - இனமானப் பேராசிரியர்
நற்றமிழத் தொண்டகம்.




இரண்டாயிரம் ஆண்டுகளாக பிறப்பின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தி வந்த சிறுபான்மை ஆரியக்கூட்டத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து 90 ஆண்டுகாளாகத் தமிழகம் பெற்றுள்ள உரிமைகளைப் பறித்து பெற்ற உரிமைகளைப் ஒழிக்கச் சூழ்ச்சி செய்யும் இன்றைய பா.ஜ.க. சங் பரிவாரக் கூட்டத்தை எதிர் கொள்ள நம் முன்னோர்களான தலைவர்களின் வரலாறுகளை இளந்தோழர்கள் அறிந்து கொள்வது அவசியம், அப்பெருமைமிகு வரலாற்றைப் பின்பற்றி ஆதிக்க சக்திகளின் பொய்ப்புனைவுகளை முறியடித்து எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தலைவர் தளபதி மற்றும் இளந்தலைவர் உதயநிதி ஆகியோரின் வழிகாட்டுதலில் பெரும் வெற்றி பெற்று திராவிட மாடல் அரசின் நற்பணிகள் தொடர இந்நன்நாளில் சபதம் ஏற்போம். அவ்வெற்றியை பேராசிரியர் உள்ளிட்ட நம் தலைவர்களுக்கு காணிக்கையாக்குவோம்.

வாழ்க இனமானப் பேராசிரியர்! வெல்க திராவிட முன்னேற்றக்கழகம்.

---

### கோவை மாவட்டம், பேரூர் திருக்கோயிலுக்கு பிப்ரவரி 10 அன்றும் -

# மருதமலை திருக்கோயிலுக்கு ஏப்ரல் 4 அன்றும் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச. 19-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (18.12.2024) ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு அவர்கள் முன்னிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலில், அத்திருகோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 28 கிலோ 906 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் பொள்ளாச்சி கிளை மேலாளரிடம் ஒப்படைத்தார். பின்னர், பொள்ளாச்சி, பெடரல் வங்கியின் சார்பில் பக்தர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ரூ. 6 இலட்சம் மதிப்பிலான மின்கல ஊர்தியினை திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பேரூர், பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில் மற்றும் மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிப்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவு பெற்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களில் பயன்பாட்டில் இல்லாத பொன் இனங்களை ஒன்றிய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்து வருவாய் ஈட்டுதல் என பல்வேறு முனைப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.



பல ஆண்டுகாளக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் இருந்த தங்க முதலீட்டு திட்டத்தினை புதுப்பிக்க முதலமைச்சர் அவர்களின் உத்தரவைப் பெற்று, இதுவரை 13 திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்கள் உருக்கி, 442 கிலோ 107 கிராம் எடையுள்ள சுத்த தங்க கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.79 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப் பெற்று அந்தந்த திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து கடந்த 12 ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற்ற ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களை ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு அவர்கள் முன்னிலையில் கல், அரக்கு, அழுக்கு நீக்கி, பக்தர்கள் முன்னிலையில் எடையிட்டு 28 கிலோ 906 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைத்துள்ளோம். இந்த பலமாற்றுப் பொன் இனங்கள் இரு தினங்களில் மும்பைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உருக்கி பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்யப்படும்.

அதேபோல பழனி, சமயபுரம், திருவேற்காடு, நாமக்கல் போன்ற திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 700 கிலோ பலமாற்றுப் பொன் இனங்கள் இந்த மாத இறுதிக்குள் மும்பைக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த பொன் இனங்களும் உருக்கி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்யப்பட்டால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.10 கோடி திருக்கோயில்களுக்கு வட்டியாக கிடைக்கப்பெறும். இப்படி உபரியாக திருக்கோயில்களுக்கு வருமானம் கிடைப்பது தடைபட்டிருந்ததை நீக்கி செயல்படுத்தியது திராவிட மாடல் அரசாகும்.

பேரூர், பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் 20 திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தோம். இத்திருக்கோயிலில் தர்ப்பண மண்டபமானது தனியார் பங்களிப்புடன் மிகநேர்த்தியாக கட்டப்பட்டு வருகிறது. மேலும் திருக்கோயில் சார்பில் அன்னதானக் கூடம், கூடுதல் கழிப்பிட வசதி, பசுமடம் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயிலான பேரூர், பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு வருகின்ற 2025 பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி குடமுழுக்கு நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு விரைவில் அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும்.

பாம்பாட்டி சித்தர் வாழ்ந்த புனித தலமான மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த அரசுப் பொறுப்பேற்ற பின் மருதமலை திருக்கோயிலுக்கு அறங்காவலர் குழு நியமனம் செய்யப்பட்டு திருப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்த திருக்கோயிலுக்கு சாலை மார்க்கமாக வந்தாலும் சுமார் 100 படிகளை ஏறவேண்டிய நிலை உள்ளதை அறிந்து மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மின் தூக்கி பணியானது வரும் 2025 மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். இத்திருக்கோயிலுக்கு பெருந்திட்ட வரைவின் மூலம் மூன்று கட்டங்களாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்ட பணி ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 2025 ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி குடமுழுக்கு நடத்திடும் வகையில் பணிகள் விரைவுபடுத்தப்படும். இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளில் திருக்கோயிலுக்கு நிரந்தர வருமானம் ஈட்டும் வகையில் திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் போன்றவை கட்டப்படவுள்ளன. இப்பணிகள் அடுத்தாண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும். இத்திருக்கோயிலைப் பொறுத்தளவில் அறங்காவலர் குழுவின் சீரிய முயற்சியினால் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திடும் வகையில் அதிக எண்ணிக்கையிலான பணிகள் உபயதாரர் நிதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. திராவிட மாடல் ஆட்சியில் இதனையும் ஒரு ஆன்மிக புரட்சி என்றே சொல்லலாம்.

இந்த அரசுப் பொறுப்பேற்ற பின் பல்வேறு திருக்கோயில்களுக்கு அரசியல் மாச்கரியங்களுக்கு அப்பாற்பட்டு பக்திமான்களை அறங்காவலர்களாக நியமனம் செய்யாததால் அனைத்து திருக்கோயில்களிலும் அதிக அளவில் உபயதாரர் நிதியினை கொண்டே திருப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலை உருவாகியுள்ளது. இது வரை ரூ.1,185 கோடி அளவிற்கு உபயதாரர்கள் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளார்கள். உபயதாரர்கள் மேற்கொள்ள விரும்பும் பணிகளுக்கு உடனடியாக அனைத்து அனுமதிகளையும் வழங்கி வருகின்றோம்.

பூண்டி, வெள்ளியங்கிரி மலைஅடிவாரதிருக்கோயிலில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம், சுகாதார வளாகம் உள்ளிட்ட பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 80 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளது. வெள்ளியங்கிரி மலைக்கு பக்தர்கள் செல்ல படிகள் அமைக்க வனத்துறையின் அனுமதி பெறவேண்டியுள்ளது. இதுபோன்ற மலைத் திருக்கோயில்களுக்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறுவது தொடர்பாக வரும் ஜனவரி மாதத்தில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வனத்துறை இணைந்து கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி முடிவுகள் மேற்கொள்ளப்படும். பாம்பாட்டி சித்தருக்கு ரூ.1 கோடியில் மணிமண்டபம் கட்டும் பணியை விரைவில் தொடங்கி வைக்கவுள்ளோம்.

கொங்கு மண்டலத்தை பொறுத்தளவில் பல்வேறு தொன்மையான திருக்கோயில்கள் இந்த அரசால் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. அதற்கு உதாரணமாக சேலம், கோட்டைமாரியம்மன் திருக்கோயில், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயில் என சொல்லிக்கொண்டே போகலாம். இறையன்பர்கள் மகிழ்ச்சி அடைகின்ற வகையில் அளப்பரிய பணிகளை இந்து சமய அறநிலையத்துறை தொடர்ந்து நிறைவேற்றும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், பொள்ளாச்சி சார் ஆட்சியர் செல்வி ஏ.கேத்ரின் சரண்யா, இணை ஆணையர்கள் திருமதி இரா. வான்மதி. பி.இரமேஷ், துணை ஆணையர் திருமதி விஜயலட்சுமி. உதவி ஆணையர் கைலாசமூர்த்தி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர்கள் முரளி கிருஷ்ணா, ஜெயக்குமார் மற்றும் அறங்காவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.